மாலை பதிப்பு

சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

01.11.2022 செவ்வாய்க்கிழமை

supeedsam.com

supeedsam@gmail.com

ஜனவரிக்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தை எட்ட முடியும்

ஜனாதிபதி நம்பிக்கை

ஜனவரிக்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு ஒப்பந்தத்தை எட்ட முடியும் என அரசாங்கம் நம்புவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். பத்தரமுல்லையில் இடம்பெற்ற இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் 32 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பனிப்பாறையில் விழுந்த டைட்டானிக் கப்பலை தாம் கையகப்படுத்தியதாகவும் தற்போது கப்பலை பனிப்பாறையில் இருந்து நகர்த்த முயற்சிப்பதாகவும் பனிப்பாறையில் இருந்து டைட்டானிக் கப்பல் நகர்ந்தால் நாடு முன்னேற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை தன்னை திவாலானதாக அறிவித்துவிட்டதாகவும் எனினும் நிதியுதவிக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையை மேற்கொள்ள முடியும் என அரசாங்கம் நம்புவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். அதற்கமைய, நவம்பர் நடுப்பகுதியில் ஒரு ஒப்பந்தத்திற்கு வரலாம் என்றும் டிசம்பர் நடுப்பகுதியில் சர்வதேச நாணய நிதியம் வரை சென்றால், தங்களுக்கு ஒரு பெரிய நன்மை கிடைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறாயினும், ஜனவரி மாதத்திற்குள் அதனைப் பெறுவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அடக்குமுறைக்கு எதிரான தொழிற்சங்கங்களின் கூட்டுப் பிரகடனத்தில் சஜித் கையெழுத்து

பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவிப்பு

நாளைய தினம் முன்னெடுக்கப்படவுள்ள பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என சிலர் கூறுகின்றனர் எனவும்,இது முழுக்க முழுக்க பொய் எனவும்,இந்த பேரணிக்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையாக ஆதரவளிக்கும் என்பதோடு,ஐக்கிய மக்கள் சக்தியானது நூறு வீதம் தமது ஒத்துழைப்பை வழங்கும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அடக்குமுறைக்கு எதிராக தனித்து நின்று

02

வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத்திற்கு 43,200 கோடி கல்விக்கு 50,400 கோடி ரூபாயும் ஒதுக்கீடு

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத்திற்காக 43,200 கோடி ரூபாயும் கல்விக்காக 50,400 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்துள்ளார். இது தவிர, பாதுகாப்புச் செலவினங்களுக்காக 36700 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டுக்கான வரவு

02

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்ல பயணக்கட்டுப்பாடு

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் கூடும் நாட்களிலும் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போதும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் பிரதமரினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, நாடாளுமன்ற அமர்வுகள்

02

பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பாடசாலை மாணவன் இலக்கான சம்பவத்துக்கு

கடுமையான எதிர்ப்பை தெரிவித்த இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்

போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் பாடசாலை மாணவன் இலக்கான சம்பவத்துக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பை தெரிவித்து இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் அவர்கள்

02

இலங்கையில் உள்ள வீடுகளை அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யும் வேலைத்திட்டம்

43,700 அமெரிக்க டொலர்கள் இலாபம்

இலங்கையில் உள்ள வீடுகளை அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு 3 வீடுகளை விற்பனை செய்து 43,700 அமெரிக்க டொலர்களை அரசாங்கம் ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பன்னிபிட்டிய வியாட்புர, கொட்டாவ மற்றும் மாலம்பே பிரதேசங்களில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீட்டுத் தொகுதிகளில் இந்த வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும் 10 வீடுகளை வாங்க வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், பிரித்தானியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கையர்களால் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் உடையில் மாற்றம் வேண்டும் இலங்கை ஆசிரியர் சங்கம்

அரச சேவையின் கௌரவத்தை பேணும் வகையில் அரச உத்தியோகத்தர்களுக்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை ஆசிரியர்களுக்கும் அமுல்படுத்த வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு அதிக விலை கொடுத்து சேலைகளை வாங்குவதில் சிக்கல் நிலவி வருவதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அத்தோடு, போக்குவரத்து சிரமம் காரணமாக ஆசிரியர்கள் பலர் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் பாடசாலைக்கு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, புடவை அல்லது ஒசரியைவிட எளிதான எளிய உடையை அணிவதன் மூலம் ஆசிரியர்களால் மாணவர்களை கையாள்வதில் திறமையாக செயற்பட முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் 06 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலிலுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி, பதுளை, கேகாலை, மாத்தறை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த மாவட்டங்களில் வசிப்பவர்கள் மலைகள், சரிவுகள் மற்றும் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கவனமாக இருக்க வேண்டும் என்றும் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவில் இருந்து ஒரு தொகுதி டீசல் நாட்டிற்கு வரவுள்ளது

காஞ்சன விஜேசேகர

சீனாவில் இருந்து ஒரு தொகுதி டீசல் இம்மாத இறுதிக்குள் நாட்டிற்கு வரவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். அபுதாபியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டபோதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் ஏதேனும் உதவிகள் கிடைத்துள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கையானது பத்து மாதங்கள் மிகவும் நெருக்கடியான காலத்தை கழித்ததாகவும் அதன் காரணமாகவே எரிசக்தி துறையில் நெருக்கடி ஏற்பட்டதாகவும் அமைச்சர்

02

அடுத்த ஆண்டு முதல் தரம் 10 மாணவர்களுக்கு புதிய பாடம்

அடுத்த வருடம் (2023) முதல் பாடசாலைகளில் தரம் 10 க்கான பாடங்களில் செயற்கை நுண்ணறிவு **(Artificial Intelligence)** என்ற பாடத்தை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். நிகழ்வொன்றில் உரையாற்றிய கல்வி அமைச்சர், இலங்கையின் கல்வி அமைப்பில் தொழில்நுட்பத்தை இணைப்பதற்கு மைக்ரோசாப்ட் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இலங்கையின் கல்வி முறையானது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று அவர் மேலும் கூறினார். அனைத்து ஆசிரியர்களும் தமது கல்விப் பாடங்களுக்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக் கூடிய வகையில் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார்.

அடக்குமுறைக்கு எதிரான தொழிற்சங்கங்களின்

போராடக் கூடாது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அதற்காக ஒன்றிணைந்து போராட வேண்டும் எனவும் தெரிவித்தார். ஓதுங்கி, தனிமைப்பட்டு குறுகிய கொள்கைகளின் அடிப்படையில் இந்நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,தற்போது நிலவும் அடக்குமுறைகளை எதிர்கொள்ள அனைவரும் ஒன்றிணைவதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். நாளைய தினம் இடம் பெறும் பேரணி ஓர் அமைதி வழிப்பேரணி எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அதனை அடக்குவதற்கு பாதுகாப்பு தரப்பினர் தயாராக இருந்தால்,உடனடியாக அந்த தயார்படுத்தல்களை வாபஸ் பெற வேண்டும் எனவும்,அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு எவரேனும் இடையூறு விளைவித்தால்,அதற்கு எதிராக மேற்கொள்ள முடியுமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஜனநாயக,அமைதி வழிப்பேரணியை எதிர்ப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அடக்குமுறையின் பிதாக்கள் ராஜபக்சக்களே எனவும் தெரிவித்தார். சிறிதம்ம தேரர்,வசந்த முதலிகே உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு எவ்வித குற்றச்சாட்டுகளும் இன்றியே சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,ராஜபக்சக்களும் மொட்டுவின் ஏனைய மக்கள் பிரதிநிதிகளுமே புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்கள் எனவும் தெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று (01) இடம் பெற்ற அடக்குமுறைக்கு எதிரான தொழிற்சங்கங்களின் கூட்டுப் பிரகடனத்தில் கையொப்பமிடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்தில்

செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்பிற்காக 57,200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய குறிப்பிட்டார். அரச வருமானத்தை 8.5 வீதத்தில் இருந்து 13 வீதமாக அதிகரிக்கவும், அரச வருமானத்தில் 90 வீதத்தை வரி மூலம் பெறவும் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. இலங்கையின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி -8 வீதமானது, எதிர்காலத்தில் -3 வீதமாக அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அரஞ்சித் சியம்பலபிட்டிய தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் அந்த வருடத்திற்கான அரசாங்கத்தின் மொத்த செலவீனங்கள் 788500 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்ல பயணக்கட்டுப்பாடு

மற்றும் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது அமைச்சர்கள் வெளிநாடு செல்ல முடியாது. இருப்பினும், அவசர மருத்துவத் தேவைகள் அல்லது மிக அவசரமான அரசுப் பயணங்களை இந்த கட்டுப்பாடுகள் பாதிக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பாடசாலை மாணவன் இலக்கான

குறிப்பிட்டுள்ளார். கடிதத்தில் உள்ளடங்கிய விடயங்களாக முச்சக்கர வண்டியொன்றில் பிரதான வீதியில் பயணம் செய்து கொண்டிருந்தபோது பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் மாத்தறை மகாலிங் வட வித்தியாலயத்தில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கின்ற ஹரிஸ் ஹஸங்க தேஸான் (15) மாணவனுடைய தலையில் கடுமையான காயம் ஏற்பட்டமை சம்பந்தமாக இலங்கை ஆசிரிய சேவை சங்கமானது அதற்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பினைத் தெரிவிப்பதோடு அதற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கையையும் முன்னெடுக்குமாறு வலியுறுத்தி நிற்கின்றோம்.

02)விஷேடமாக இலங்கைப் பொலீஸார் இதுவரையில் மேற்கொண்டுள்ள சூட்டுச் சம்பவங்களினால் ஏராளமான மனித உயிர்கள் பறிக்கப் பட்டுள்ளதோடு அண்மையில் இவ்வாறான சூட்டுச் சம்பவத்தினால் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவரொருவனினதும் உயிர் பறிக்கப் பட்டதனையும் எடுத்துக் காட்ட முடியும்.

03)அவ்வாறே தங்களுடைய உரிமைகளுக்காக போராட்டங்களை மேற்கொண்ட பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பு போராட்டத்துக்கு அநீதியான முறையில் தாக்குதலை மேற்கொண்டு , அவர்களை கைது செய்து ,தடுப்புக் காவலில் வைக்கும் செயற்பாடுகளை மேற்கொண்ட இலங்கைப் பொலீஸார் இதுவரையில் நாட்டின் பொது மக்களின் பாதுகாப்புக்கான சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்து தங்களுடைய பிரதான பொறுப்பில் இருந்து விலகி நிற்கின்றனர்.

04)கடந்த நாட்களில் தலைமைப் பொலிஸ் அதிபர் ஒருவர் போதைப் பொருள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையொன்று சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்டது. அதற்குக் கடுமையான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப் பட்டுள்ள பின்புலத்தில் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் நிறுவனம் மற்றும் அதிகாரிகள் சிலர் குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் இந்த நிறுவனங்கள் தங்கள் பொறுப்பற்ற தன்மையால் கடுமையான சீரழிவைச் சந்தித்து வருகின்றன என்பதனை நாங்கள் உறுதியாக வலியுறுத்துகிறோம்.

மேலும் நாட்டின் சட்டம் மற்றும் நிறுவனங்களின் குறுகிய நோக்கங்களுக்கு இடமளிக்காமல் முதலில் இலங்கைப் பொலீஸார் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு கிடைப்பதனை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எமது சங்கம் பொறுப்புடன் கேட்டுக் கொண்டுள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கடிதத்தின் பிரதியினை பாதுகாப்புச் செயலாளருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளதாக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் பிரதீப் அவர்கள் குறிப்பிட்டார்.

சீனாவில் இருந்து ஒரு தொகுதி டீசல் நாட்டிற்கு வரவுள்ளது காஞ்சன

சுட்டிக்காட்டினார். அதனூடாக வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தனியார் விநியோகஸ்தர்களுக்கு இத்துறையில் பிரவேசிப்பதற்கான சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புகள் திருத்தியமைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் 2030ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் 70 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சூரிச் நகரில் நடைபெற்ற அகணி சுரேஸின் நூல்கள் பாடல்கள் அறிமுகவிழா

கனடாவைச் சேர்ந்த அகணி சுரேஸ் அவர்களின் நூல்கள், பாடல்கள் அறிமுகவிழா சுவிற்சலாந்து சூரிச் நகரில் கணித கற்கைநெறி மையம் நிறுவனர் ஆசிரியர் திரு. ச.மகேந்திரன் அவர்களின் தலைமையில் 30.10.2022 மாலை சரியாக 5:10 மணிக்கு **Birmensdorferstrasse 67** *8004 Zürich* நூலக மண்டபத்தில் நிறைந்த பார்வையாளர்களோடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் அகணி சுரேஸ் அவர்களும் கனடாவில் இருந்து பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் அகணி சுரேஸ் அவர்கள் கடந்த சில வருடங்களாக வெளியிட்ட ஆறு நூல்கள் பற்றிய கருத்துரைகளும் , அவரின் வரிகளில் உருவான பாடல் களுக்கான அறிமுகமும் அரங்கில் பார்வையாளர்களின் கரகோசங்கள் ஒலிக்கச் சிறப்பாக நடைபெற்றன. இந்த நிகழ்வில் வரவேற்புரையை செல்வி வித்தியா மகேந்திரன், கணித கற்கைநெறி மையம் வழங்கினார். நிகழ்ச்சி தொகுப்பாளராக திரு முருகேசன் குமணன் அவர்கள் மிகவும் நேர்த்தியாக நெறிப்படுத்தினார். இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சுவிஸ் தமிழ் இலக்கிய சங்கத்தின் தலைவர் கலாநிதி கல்லாறு சதீஸ் அவர்கள் கலந்து சிறப்பித்து உரையாற்றினார். அவர் தனது உரையில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 30 வருட காலப் பணிகளையும் அந்த அமைப்பின் முன்னாள் தலைவர்கள் பலரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களையும் பாராட்டிக் கொண்டதோடு கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்காலத் தலைவர் அகணி சுரேஸ் அவர்களின் எழுத்துப் பணிகளைப் பாராட்டி அவருக்கு “நிறைதமிழ்” என்ற விருதினை சுவிஸ் தமிழ் இலக்கியச் சங்கத்தின் சார்பில் வழங்கி மகிழ்ந்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பிரான்ஸ் தமிழ்ச் சோலை பாடசாலை ஒன்றின் பொறுப்பாளர் திரு சேத்திரபாலன் அவர்கள் கலந்து சிறப்பித்ததோடு அகணி சுரேஸ் அவர்களின் “வெகுளாமை” நூல் பற்றிய கருத்துரையையும் வழங்கினார். சுவிஸ் பேர்ண் வள்ளுவர் பாடசாலை நிறுவனரான திரு முருகவேள் பொன்னம்பலம் அவர்கள் வாழ்த்துரை வழங்கியதோடு அகணி சுரேஸ் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பூக்கொத்து வழங்கி சிறப்பும் செய்தார். அகணி சுரேஸ் அவர்களின் கதைச்சாரல் நூலிற்கான கருத்துரையை திரு துரைராசா சுரேந்திரன் அவர்களும் , கட்டுரைச் சாரல் நூலிற்கான கருத்துரையை திருமதி கௌரி பூர்ணராஜன் பாபு அவர்களும், அன்புடைமை நூலிற்கான கருத்துரையை திருமதி கமலினி கதிர் அவர்களும், இன்னும் இருக்கிறது இனிய வாழ்வு நாவலுக்கான கருத்துரையை திரு குடத்தனை உதயன் அவர்களும் , இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதையல்கள் நூலிற்கான கருத்துரையை திரு வடிவேலு அருள்நந்தன் அவர்களும் வழங்கினர். அகணி சுரேஸ் அவர்களின் உறவினர் திருமதி விமலாதேவி ஆறுமுகம் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்.

எழுத்தாளர் அகணி சுரேஸ் அவர்களின் ஏற்புரையை அடுத்து நூல்களின் பிரதிகள் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டன. விழா இரவு 830மணிக்கு இனிதே நிறைவுற்றது. இந்த நிகழ்விற்கான அனைத்து ஒருங்கமைப்புப் பணிகளையும் கணித கற்கைநெறி மைய நிறுவனர் திரு ச.மகேந்திரன் அவர்களும் , ஆசிரியர் செல்வி வித்யா மகேந்திரன் அவர்களும் செய்திருந்தார்கள்.

Since 2014

அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

மணமகன் விபரம் (மணமகள் தேவை)

25096 | வே | 1984
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

21276 | வே | 1993
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

23671 | வே | 1991
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

25090 | வே | 1990
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

21372 | வே | 1988
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

21297 | வே | 1987
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 12

25081 | பி | 1986
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

20931 | வே | 1993
கந்தர்மடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

20733 | வி | 1992
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

23788 | வே | 1995
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

20538 | வே | 1989
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சூ.செவ்: 08

21102 | வே | 1987
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

25087 | வே | 1986
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

21321 | வே | 1993
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சூ.செவ்: 09

25105 | வே | 1990
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

20706 | வே | 1991
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

25102 | வே | 1989
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சூ.செவ்: 03

20850 | வே | 1987
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

21324 | வே | 1987
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

21033 | கோ | 1992
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

மணமகள் விபரம் (மணமகன் தேவை)

25099 | வே | 1983
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

21510 | வே | 1996
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

20874 | வே | 1994
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

23638 | வே | 1993
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சூ.செவ்: 10

20619 | வே | 1991
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

21471 | வே | 1990
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

21333 | வே | 1985
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

23782 | வே | 1996
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

20694 | வே | 1995
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

25093 | வே | 1993
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

20883 | வே | 1993
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

21444 | வே | 1991
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

21105 | வே | 1987
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சூ.செவ்: 07

21300 | வே | 1989
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சூ.செவ்: 10

23710 | வே | 1996
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சூ.செவ்: 06

21132 | கோ | 1994
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

23749 | வே | 1993
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

23653 | வே | 1991
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ்: 06

23821 | வே | 1998
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

20853 | கோ | 1999
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்

ADASHA BEAUTY CARE
MARAN JENUSHA

அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி

Arunthathee
Presents

மாபெரும் மோதிரம்

COLOMBO 2023

08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

சுவிஸ் நாட்டில் அகணி சுரேஸ்
நிறை தமிழ் விருதினைப்பெற்றார்





(வேதாந்தி)

எழுத்தாளரும் தமிழ் ஆர்வலருமான அகணி சுரேஸ் அவர்களது தமிழ் இலக்கிய மற்றும் சமுகப் பணிகளைப்பாராட்டி சுவிஸ் தமிழ் இலக்கிய சங்கம் நிறைதமிழ் விருதினை வழங்கி கௌரவித்துள்ளது. சுவிஸ் நாட்டில் சூரிச் நகரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கணித கற்கை நெறி மைய நிறுவனர் ஆசிரியர் ச.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற அகணி சுரேஸின் நூல்கள், பாடல்கள் அறிமுகவிழா வின்போதே முனைவர் நாகேஸ்வரன் அருள்ராசா (கலாநிதி கல்லாறு சதீஷ்) அவர்களினால் இவ்வி ருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

மாணவர் வருகை 50 வீதமாக குறைவு

வாகரை பிரதேச செயலாளர் அருணன்

(ரக்ஸனா)

தற்போது நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார

நெருக்கடி காரணமாக வாகரைப் பிரதேச மாணவர் வருகை 50 சத வீதமாகக் காணப்படுவதோடு மாணவர் இடைவிலகலும் அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் ஜி. அருணன் தெரிவித்தார். இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் நலிவுற்ற பெண்கள் சிறுவர்கள் தொடர்பான சமூக அபிவிருத்தி அமுலாக்கத் திட்டத்தின் வெளிப்படுத்துகை பிரதேச மட்ட நிகழ்வு வாகரை கலாசார மத்திய நிலையத்தில் திங்கள்கிழமை 31.10.2022 இடம்பெற்றது.

வாகரைப் பிரதேச சிறுவர் சபை, மகளிர் அமைப்புக்களின் ஏற்பாட்டில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெண்கள், சிறுவர்கள், மாணவர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளின் வெளிப்படுத்துகை அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. அங்கு நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய பிரதேச செயலாளர் அருணன், எமது பிரதேச செயலகப் பிரிவிலிருந்து அநேகமான தாய்மார் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்லுதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாவணர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது.

இது போன்ற மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்காக எம்மால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொருளாதாரப் பிரச்சினைக்கும் போஷாக்குப் பிரச்சினைக்கும் எம்மால் இயலுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இளைஞர் அபிவிருத்தி அகம், வேர்ள்ட் விஷன் போன்ற தன்னார்வத் தொண்டர் அமைப்புக்களின் சேவைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே பிள்ளைகளைக் கட்டாயம் பாடசாலைகளுக்கு அனுப்ப பெற்றோரும் பாதுகாவவலர்களும் முயற்சிக்க வேண்டும்." என்றார்.

வாகரைப் பிரதேச உதவிச் செயலாளர் ஜி. பிரணவன், கல்குடா கல்வி வலய முறைசாரக் கல்வி உத்தியோகத்தர் என். சதார்த்தனன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. கலைவாணி, மகளிர் அபிவிருத்தி அலுவலர் கே. நவநிதனி உள்ளிட்டோரும் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவன அலுவலர்களும் வாகரைப் பிரதேச சிறுவர் சபை, மகளிர் அமைப்புக்கள், சிரேஷ்ட பிரஜைகள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வில் சிறுவர்களுக்கும் சிரேஷ்ட பிரஜைகளுக்கும் அன்பளிப்புக்களும் ஆக்கச் செயல்பாட்டில் ஈடுபட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்), நிறுவனம் வாகரைப் பிரதேச செயலகப் பிரிவில் நலிவுற்ற பெண்கள் சிறுவர்கள் தொடர்பான சமூக அபிவிருத்தி அமுலாக்கத் திட்டத்திற்கு நிதி அனுசரணை வழங்குகின்றது.

இளவயதில் சாதித்த மட்டு மாணவன்

மிகவும் இளவயதில் தேசிய சாஹித்திய விருதுக்காக மே.தகீஷனின் வண்ண எண்ணங்கள் என்ற சிறுவர் இலக்கிய நூல் பரிந்துரைக்கப்பட்டு வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து கௌரவமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசால் அரச இலக்கிய விருது வழங்கல் விழா ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படுவது வழக்கமாகும். வெவ்வேறு துறைகள் சார்ந்த நூல்களுக்காக 1957 இல் இருந்து இவ்விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகிறது. இவ்வருட தேசிய சாஹித்திய இலக்கிய விருது வழங்கல் நிகழ்வில் சிறுவர் இலக்கிய சாஹித்திய விருதுக்காக மூன்று நூல்கள் பரிந்துரைக்கப்பட்டன.

ஷெல்லிதாசன் எழுதிய அம்மாவுக்குப் பிடித்த கனி, தங்கராசா இன்பராசா எழுதிய அப்பாவின் ஆரிராரோ, மேகராசா தகீஷன் எழுதிய வண்ண எண்ணங்கள் போன்ற நூல்களே பரிந்துரைக்கப்பட்டன. இவற்றுள் ஷெல்லிதாசனுக்கு சாஹித்திய விருதும் ஏனைய இருவருக்கும் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டன.

சிறுவர் இலக்கியம் என்ற வகையில் சிறுவர்களுக்காக பெரியோர் எழுதும் இலக்கியமே இதுவரை கவனம்செலுத்தப்பட்டு வந்தது. காரணம் சிறுவர்கள் இத்தகைய முயற்சிகள் சார்ந்து வழிப்படுத்தப்படாமையாகும். இம்முறை முதன்முறையாக சிறுவன் சிறுவர்களுக்காக எழுதிய நூலும் பெரியவர்களோடு போட்டியிட்டு சாஹித்திய விருதுக்காக பரிந்துரை செய்யப்பட்டமை வரலாற்றுப் பதிவாகும்.

இவ்வாறு சாதித்த சிறுவன், மட்டக்களப்பு சிவானந்த தேசிய பாடசாலையில் தரம் எட்டில் தற்போது கல்வி பயில்கின்றான். இந்த நூலை கடந்த 2021 இல் அச்சாக்கம் செய்திருந்தார். தரம் 6,7களில் கல்வி கற்கும்போதே இந்த நூலிலுள்ள பாடல்களை எழுதினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பண்டிகை தினங்களிலும், ஏனைய உலக தினங்களிலும் தனது பெற்றோருக்கும், உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் தரம் 4இல் இருந்து கற்கும் போதே கவிதை எழுதி தனது வாழ்த்துக்களை தெரிவித்து வந்தமையுடன், அதனை அவரது பெற்றோர் ஆர்வப்படுத்தியதுமே, இன்று இச்சாதனையை நிலை நாட்டுவதற்கு காரணமென குறித்த மாணவன் குறிப்பிட்டான்.

65 வருட சாஹித்திய விருது விழா வரலாற்றில் முதன்முறையாக சிறுவர் இலக்கியத்திற்கு சிறுவனின் நூல் பரிந்துரை செய்யப்பட்டு கௌரவமளிக்கப்பட்டமை பாராட்டப்படவேண்டியதாகும். எதிர்காலத்தில் சிறுவர்கள் எழுதிய சிறுவர் இலக்கியப் படைப்பை பெரியவர்களின் படைப்போடு ஒப்பிடாது விருது வழங்கப்படுமாயின் சிறுவர்களை மேலும் கௌரவப்படுத்துவதாக அமையும். இளையவரான (13 வயது) தகீசனை மட்டக்களப்பு சமூகம் சார்ந்து நாமும் வாழ்த்துகிறோம்.

பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட 77 மாணவர்கள் கௌரவிப்பு

வி.சுகிர்தகுமார்

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து இவ்வருடம் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட 77 மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று சாயிசமித்தி நிலையத்தின் மண்டபத்தில் நேற்று இரவு இடம்பெற்றது.

ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தின் தலைவர் வி.சுகிர்தகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதிகளாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்து பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.குணபாலன் ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் அருளாளராக ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ ப.கேதீஸ்வரக்குருக்கள் கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக மேலதிக மாவட்ட பதிவாளரும் சட்டமானியுமான எம்.பிரதீப் அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்ற தலைவர் த.கயிலாயபிள்ளை ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்ற தலைவர் வே.சந்திரசேகரம் ஓய்வு பெற்ற அம்பாரை மாவட்ட உள்ளகக்கணக்காய்வாளர் எஸ்.கனகரெத்தினம் ஆலய முன்னாள் தலைவர் க.கிருஸ்ணமூர்த்தி முன்னாள் பிரதேச சபை தவிசாளர் நடராஜா இந்து இளைஞர் மன்ற உபதலைவர் எஸ். புண்ணியமூர்த்தி ஓய்வு நிலை அதிபர் கோபாலபிள்ளை அதிபர்களான மு.சண்டேஸ்வரன் க.ஜெயந்தன் ந.நேசராஜா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

அதிதிகளை வரவேற்கும் நிகழ்வோடு ஆரம்பமான நிகழ்வில் மங்களவிளக்கேற்றல் இறைவணக்கம் இடம்பெற்றது. தொடர்ந்து ஆசியுரையினை சிவஸ்ரீ ப.கேதீஸ்வரக்குருக்கள் வழங்கினார்.

தொடர்ந்து ஆலயத்தின் தலைவர் வி.சுகிர்தகுமார் உரையாற்றுகையில் ஆலங்கள் சமய பணிகளோடு சமூக பணிகளையும் முன்னெடுக்க வேண்டும் எனும் அடிப்படையில் ஆலய உண்டியல் வருமானத்தில் மூன்றிலொரு பகுதியை சமூகப்பணிகளுக்காக ஒதுக்கியுள்ளோம். அதிலும் குறிப்பான கல்வி அபிவிருத்தி முக்கியத்துவம் வழங்குவது எனும் தீர்மானத்திற்கு அமைய பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 77 மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வை ஏற்பாடு செய்தோம். இதற்கான நிதி உதவியினை பல சமூக நலன் விரும்பிகள் முன்வந்து வழங்கினர். ஏனைய உதவிகளை சிலர் வழங்கினர். அந்த வகையில் உதவி செய்த அனைவருக்கும் அழைப்பை ஏற்று வருகை தந்த அதிதிகளுக்கும் ஒத்துழைப்பை வழங்கிய நிருவாகம் திருப்பணிச்சபை மகளிர் அணி உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

இதன் பின்னர் உரையாற்றிய இந்து இளைஞர் மன்ற தலைவர் த.கயிலாயபிள்ளை பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்து பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ். குணபாலன் ஆகியோர் ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தினால் முன்னெடுக்கப்பட்ட குறித்த நிகழ்வை பாராட்டுவதாகவும் இதுபோன்ற செயற்பாடுகள் மாணவர்களுக்கு உந்துதலை ஏற்படுத்தும் எனவும் கூறினர். கல்வி அபிவிருத்திக்கான இதுபோன்ற செயற்பாடுகளை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் எனவும் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் இலக்குடன் கல்வி பயணத்தை தொடர்வதுடன் இந்த சமூகத்திற்கு தேவையான ஒழுக்கமுள்ள பிரஜையாக உருவாக வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

இதன் பின்னராக அதிதிகள் அனைவரும் இணைந்து மாணவர்களுக்கான பாராட்டு சின்னத்தை வழங்கி வைத்ததுடன் பதக்கங்களையும் அணிவித்தனர்.

இறுதியாக செயலாளர் ந.தர்மராஜாவின் நன்றியுரையுடன் நிறைவுற்றது.

தேசிய உற்பத்தி திறன் போட்டியில் மட்டு மேற்கு கல்வி வலயத்திற்கும் ஐந்து பாடசாலைகளுக்கும் பாராட்டு

தேசிய உற்பத்தி திறன் போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய அலுவலகத்திற்கும், அதன் கீழ் அமைந்துள்ள ஐந்து பாடசாலைகளுக்கும் பாராட்டு (**Commendation**) கிடைத்துள்ளன.

நிறுவனங்களின் சிறந்த நடைமுறைகளினூடாக சேவைநாடி ஃ பயனர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய உற்பத்தித்திறன் போட்டிகளில் 2020 ஆம் வருட போட்டியில் வெற்றி பெற்ற நிறுவனங்களுக்கான விருது வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயம் - **Schools UpTo Advance Level category>**, உன்னிச்சை 8 ஆம் மைல் கல் அ.த.க.பாடசாலை – **Schools UpTo Ordinary Level category**, கற்சேனை அ.த.க.பாடசாலை – **Schools UpTo Ordinary Level category**, குறிஞ்சாமுனை சக்தி வித்தியாலயம் – **Schools UpTo Grade Five category**

போன்றனவும், மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகம் – **Inter Department category** பாராட்டினைப் பெற்றுள்ளன.

தேசிய மட்டத்தில் நடைபெற்ற டைக்குவாண்டோ

போட்டியில் பதக்கங்களை பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தேசிய ரீதியில் டைக்குவாண்டோ **(Taekwondo)** போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளை புரிந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு ளுமுழு விளையாட்டு களத்தில், அக்கழகத்தின் தலைவர் கே.ரீ.பிரகாஷ் தலைமையில் இடம்பெற்றுள்ளது. இதன் போது அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற பாடசாலை மட்ட டைக்குவாண்டோ **(Taekwondo)** போட்டியில் பங்குபற்றி தேசியரீதியில் இம்மாவட்டத்திற்கான முதலாவது வெண்கலப்பதக்கத்தினை ஈட்டித்தந்து வரலாற்று சாதனை புரிந்த புனித மிக்கேல் கல்லூரி மாணவன் செல்வன்.டியோன் செலர் மற்றும் முறக்கொட்டான்சேனை இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவன் செல்வன்.வீ.கிருஷாந்தன் போன்றோர் விசேடமாக கௌரவிக்கப்பட்டதுடன் மேலும் மாகாண மற்றும் மாவட்ட ரீதியில் கராத்தே **(Karate)** மற்றும் டைக்குவாண்டோ **(Taekwondo)** போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளை புரிந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொண்டு அம்மாணவர்களை கௌரவப்படுத்தியிருந்தார். அத்துடன் 2006ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 13 பதக்கங்களை தேசிய மட்டத்தில் இக்கழகம் வென்றெடுத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது . குறித்த இந்நிகழ்வின்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார், அதிபர்கள் உடற்பயிற்சி ஆசிரியர்கள், ளுமுழு விளையாட்டு கழகத்தின் செயலாளர் மதுபன் உட்பட மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி

தலவாக்கலை பி.கேதீஸ்

போதை ஒழிப்பு தடுப்பு வாரத்தையொட்டி நேற்று (1) தலவாக்கலை பொலிஸ் நிலையத்தினூடாக கிறேட்வெஸ்டன் பாடசாலையில் தரம் 10,11 வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு போதை வஸ்து பாவணையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டப்பட்டது. அதன் பின்னர் பாடசாலை வளாகத்தில் மரக் கன்றுகள் நாட்டப்பட்டன. இந்நிகழ்வில் தலவாக்கலை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மருதநாயகி, யோகரட்ணம், காந்தரூபன்,பண்டார மற்றும் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத் தலைவராக நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தெரிவு

(வாஸ் கூஞ்ஞ)

நீதியின் தேவன் என பலராலும் அழைக்கப்படும் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் அவர்கள் அகில இலங்கை மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த 26.10.2022 புதன்கிழமை அன்று அகில இலங்கை மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கிடையே இவர்களின் சங்கத்தின் தலைவருக்கான தெரிவு தேர்தலிலே இவர் தலைவராக தெரிவு செய்யப்படார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ் அகில இலங்கை மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட நீதிபதி மாணிக்கவாசகர்

இளஞ்செழியன் அவர்களே இவ் சங்கத்தின் முதல் தமிழர் என்பதும் நோக்கக்கூடியதாக இருக்கின்றது.

இஸ்லாம் பாடப் புத்தகங்களை நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு பணிப்புரை

நூருள் /ஹுதா உமர்

இஸ்லாம் பாடப் புத்தகங்களை அனைத்து பாடசாலைகளுக்கும் தற்காலிகமாக வழங்குமாறும், எதிர்காலத்தில் பாடப் புத்தகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு திருத்தங்கள் தொடர்பிலும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவினுடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, அமைச்சு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக, மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான இஸ்லாம் பாடப் புத்தகத்தினை மீள் விநியோகம் செய்தல் தொடர்பில், நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஹ்பி எச்.இஸ்மாயில் தலைமையிலான குழுவினர், பல அரசியல் பிரமுகர்களுடன் தொடர்ச்சியாக சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். அந்தவகையில், நேற்றைய தினம் (31) அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனை சந்தித்து, இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடினர்.

அதன் பிற்பாடு, இன்றைய தினம் (01) அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளர் உட்பட அதன் பிரதிநிதிகளும், மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் மற்றும் சட்டத்தரணி ஷஹ்பி தலைமையிலான நீதிக்கான மய்யத்தின் உறுப்பினர்களும், கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அவர்களை சந்தித்து, மேற்படி விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தினர். கல்வி அமைச்சருடனான சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் மேலும் கூறியதாவது,

“இஸ்லாம் பாடப் புத்தகங்களை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து பாடசாலைகளுக்கும் தற்காலிகமாக வழங்குமாறும், பாடப் புத்தகத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் சரியா? அல்லது எவ்வாறான திருத்தங்களை செய்ய வேண்டும் என்பதை, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவினுடைய ஆலோசனைகளைப் பெற்று, அடுத்த வருடம் வழங்கப்படும் புத்தகத்தில் அதனை சேர்த்துக்கொள்ளுமாறும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேலும், எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்களை செயற்படுத்துகின்றபோது, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவினுடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் கல்வி அமைச்சர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்” என்றார்.

மல்யுத்த போட்டியில் தேசிய ரீதியில் சாதனை புரிந்த வீரர்களை கௌரவித்த இராஜாங்க அமைச்சர்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

2022 ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட பாடசாலை மட்ட மல்யுத்த போட்டியில் வெற்றி பெற்று தேசிய ரீதியில் சாதனை புரிந்த மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மகிழடித்தீவு சரஸ்வதி மகா வித்தியாலய வீரர்களை வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் நினைவுச்சின்னங்களை வழங்கி கௌரவித்துள்ளார்.

நாவிதன்வெளி பிரதேச இலக்கிய விழா

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நாவிதன்வெளி பிரதேச செயலகம் இணைந்து நடாத்திய பிரதேச கலை இலக்கிய விழா, பிரதேச செயலாளர் எஸ் ரங்கநாதன் தலைமையில் அண்மையில் நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம அதியாக கலந்து கொண்டதுடன் உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், நாவிதன்வெளி கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி என்.நிதர்ஷினி மகேந்திரகுமார், பிரதேச செயலக கணக்காளர் கே.நிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் இ. லதாகரன், நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன், ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டதுடன் விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்ஸான் கலந்து கொண்டார்.

நிகழ்வின் போது பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற பாடசாலை மற்றும் திறந்த பிரிவு போட்டியாளர்கள் அதிதிகளினால் பரிசில்ககள், சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். நாவிதன்வெளி பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். எம்.ஷினாஸ் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த கலை, இலக்கிய விழாவில் இயல், இசை, நாடகம் என கலை, கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. இந்த நிகழ்வில் சமூர்த்தி முகாமையாளரும் சட்டத்தரணியுமான எம்.எம். எம்.முபீன் சமூக செயற்பாட்டாளர்களான எம். மஹ்ரூப், எம்.ஏ. நளீர் உட்பட பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கலை மன்றங்களின் பிரதிநிதிகள், பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வுகளை பிரதேச கலைஞரும், அறிவிப்பாளருமான குலசிங்கம் கிலேசன் தொகுத்து வழங்கினார்.

கல்முனையில் வாகன நெரிசல்

எஸ்.சிராஜ/தீன்

கல்முனை பிரதேசத்தில் முற்பகல் பிற்பகல்.வேளைகளில் வாகன நெரிசல் ஏற்பட்டு வருவது தற்போது அன்றாட வழக்கமாகிவிட்டது. இதனால் உரிய வேளைக்கு செல்வதில் பல சிக்கல்களை அரச ஊழியர்கள் எதிர்நோக்கி வருகின்றனர். பாதுகாப்பு படையினர் நிலைமைகளை சீரசெய்வதில் அதீத கவனம் செலுத்யி வருகின்றனர்.

தொண்டு நிறுவனத்திற்கும், மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவிற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்து

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் **LIFT** நிறுவனத்தினால் மட்டக்களப்பில் மற்றுமொரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. **GCERF** மற்றும் உநுடுஏநுவுயுளு நிறுவனங்களின் நிதி அனுசரணையில் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டத்தில் இளைஞர்கள் மத்தியில் பரப்பப்படும் வன்முறைத்தீவிரவாத எண்ணங்களைத் தடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இளைஞர் யுவதிகளுக்கு சமூக ஊகங்களின் சரியான பயன்பாடு, ஊடக தர்மம், ஊடக நெறிமுறைகள் ஊடக சட்டங்கள் போன்ற பல்வேறு விடயங்களைத் தெளிவு படுத்தும் பயிற்சி வகுப்புக்கள், செயலமர்வுகள் என்பன **LIFT** நிறுவனத்தினால் நடாத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகளுக்கான வளவாளர்களாக பணியாற்றும் வாய்ப்பினை சமூக மேம்பாட்டில் அக்கறை கொண்ட ஊடகவியலாளர்களுக்கு வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவினால் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் டுஜகுவு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி.ஜானு முரளிதரன் மற்றும் மாவட்ட ஊடகப் பிரிவு பொறுப்பதிகாரி ஜீவானந்தன் ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சமூக மேம்பாட்டில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட ஊடகவியலாளர்களுக்கு பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி (**TOT**) வழங்கப்பட்டு அதிலிருந்து தெரிவு செய்யப்படும் ஊடகவியலாளர்கள் வளவாளர்களாக பயன்படுத்தப்படுவர். இதன்மூலம் ஊடகவியலாளர்களின் சமூகப்பணி மேலும் ஒரு படி முன்னேற்றம் அடைவதுடன் 900 இளைஞர் யுவதிகள் ஊடகம் தொடர்பான தெளிவைப் பெறவும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

'அபிவிருத்திக்கான பழுகாமம் மாணவர் சங்கம்' அங்குரார்ப்பணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை பெருநிலத்தில் போரதீவுப்பற்று பிரதேசத்தின் பழுகாமத்தில் கடந்த மாதம் 'அபிவிருத்திக்கான பழுகாமம் மாணவர் சங்கம்' எனும் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பழைய மாணவர்கள் பலரின் வழிகாட்டலில் இந்த அமைப்பு உருவாக்கம் பெற்றுள்ளது.



இந்த அமைப்பில் பழுகாமத்தில் உள்ள திருப் பழுகாமம் விபுலானந்த வித்தியாலயம், பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம் மற்றும் திருப்பழுகாமம் மாவேற் குடா விக்கினேஸ்வரர் வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து இந்த அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ளனர். மூன்று பாடசாலைகளையும் இணைத்து இந்த அமைப்பு உருவாக்கம் பெற்றுள்ளது.

இந்த அமைப்பு முற்றுமுழுதாக கல்வியினை நோக்கமாகக் கொண்டு செயல்பட உள்ளது. மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் உள்ள மாணவர்களின் கல்வியை உயர்த்துதல், மக்களிடையே கல்வி பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் க.பொ.த. உயர்தரம், க.பொ.த. சாதாரண தரம், தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை தோற்றவுள்ள மாணவர்களுக்காக விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுத்தல், தொழில் வழிகாட்டல்களுக்கான விழிப்புணர்வு, அரச தொழில் பெறுவதற்கான பயிற்சி வழிகாட்டல் வகுப்புக்கள் போன்ற பணிகளை முன்னெடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் மேற்குறித்த பாடசாலைகளில் கல்வி பயின்று ஐக்கிய இராச்சியம், அவுஸ்ரேலியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள், மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் நிமித்தம் சென்றுள்ள பழைய மாணர்கள் மற்றும் இலங்கையில் பல பாகங்களிலும் வாழும் பழைய மாணவர்கள் என பல உறுப்பினர்கள் இதில் அங்கத்துவம் பெறுவதில்ஆர்வமாகஉள்ளனர்.இந்தஅமைப்பின்நிர்வாகத் தலைவராக சு.உதயகுமார், செயலாளராக வி.ஆயுஷ்மன், பொருளாராக நா.இந்திரநாதன் இணைத் தலைவராக ஐக்கிய இராச்சியத்தில் உள்ள அ.கங்காதரன், இணைச் செயலாளராக அவுஸ்ரேலியாவில் உள்ள ஆ.திருமாவளவன், நிதி ஒருங்கிணைப்பாளராக இரா. பிரபாகரன் ஆகியோருடன் மேலும் பல நிர்வாக உறுப்பினர்கள் இணைந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பு தொடர்பாக தலைவர் சு.உதயகுமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் 'இந்த அமைப்பானது பழுகாமத்தின் கல்வி அபிவிருத்தியினை செய்வதற்கான ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. பழுகாமத்தில் கல்வி பயில்கின்ற மாணவர்களின் கல்வியினை உயர்த்தி அவர்களுக்கான கல்வி பயில்கின்ற உன்னதமான சூழலை உருவாக்கி அவர்களை சமூகத்தில் ஒழுக்கமுள்ள நற்பிரஜைகளாக வளர்த்து விட வேண்டும் என்பதே இந்த அமைப்பின் முக்கியமான நோக்காக இருக்கும் எனவும், உலகெங்கிலும் பரந்து வாழும் பழுகாமம் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது கிராமத்திற்கு கல்வியினை முன்னேற்றகரமான பாதையில் கொண்டு செல்வதற்கு பலம் சேர்த்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், மேலும் இந்த அமைப்பில் இணைந்து கொள்ளாதவர்கள் இணைந்து இந்த அமைப்பிற்கு பலம் சேர்த்து நமது மாணவச்செல்வங்களின் கல்விக்கு கரம் கொடுக்க முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கல்முனை விவகாரத்தை இரு தரப்பினரதும் இணக்கமின்றி ஒருதலைப்பட்சமாக தீர்த்து விட முடியாது

-முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவிப்பு

(செயிட் ஆஷிப்)

கல்முனை விவகாரத்தை முஸ்லிம், தமிழ் இரு தரப்பினரதும் இணக்கப்பாடின்றி ஒருதலைப்பட்சமாக தீர்த்து விட முடியாது என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார். இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது: கல்முனை உப செயலக பிணக்கு தொடர்பில் நாங்கள் மௌனம் காத்து வருவதாக சிலர் குற்றச்சாட்டி வருகின்றனர். இது 30 வருட காலமாக புரையோடிப் போயிருக்கின்ற பிரச்சினையாகும். இதனை எடுத்தோம் கவிழ்த்தோம் என்று ஒரே நாளில் தீர்த்து விட முடியாது. முஸ்லிம், தமிழ் சமூகங்கள் சம்மந்தப்பட்ட இந்த நீண்ட கால பிணக்கு தொடர்பில் இரு சகோதர சமூகத்தினரும் சுமூகமாக பேச்சுவார்த்தை நடாத்தி, இணக்கமான தீர்வொன்றையே காண வேண்டியிருக்கிறது.

நாங்களும் இதற்கான நகர்வுகளை மிகவும் சாணக்கியமாக செய்து கொண்டுதான் இருக்கிறோம். எமது தரப்பு நியாயங்களை உயர் மட்டங்களில் முன்வைத்திருக்கின்றோம். இவற்றையெல்லாம் நாங்கள் ஊடக செய்திகளுக்காக பிரஸ்தாபிப்பதில்லை. எல்லாவற்றையும் வெளிப்படையாக சொல்லி விடவும் முடியாது. இது விடயமாக ஊடகங்களில் எமது தரப்பு செய்திகளை காணக்கிடைக்கவில்லை என்பதற்காக நாங்கள் எதுவும் செய்யாமல் மௌனமாக இருக்கிறோம் என்று அர்த்தமாகி விடாது.

எமது நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம்.ஹரீஸ், தனது தலையாய கடமையாக இதனைச் சுமந்து கொண்டு, கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். சகோதர தமிழ் பிரதிநிதிகள் என்ன சொல்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஹரீஸ் என்றொரு எம்.பி. இல்லாதிருந்தால் நாங்கள் நினைத்தது போன்று எப்போதோ சாதித்திருப்போம் என்று அவர்கள் கூறி வருகின்றனர். ஆக, எவரும் நினைத்தது போன்று செய்து விடாமல், இரு தரப்பினரதும் இணக்கத்துடனேயே இப்பிணக்கு தீர்க்கப்பட வேண்டும் என்பதில் குறியாக இருந்து செயற்படுகின்றோம் என்பதை புரிந்து கொள்ளலாம்.

இந்த விடயத்தில் எமது தலைவர் ரவூப் ஹக்கீமும் மிகுந்த பொறுப்புணர்வுடன் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார். இவ்விவகாரம் தொடர்பான நகர்வுகளின்போது அவர் பக்கபலமாக இருந்து செயலாற்றி வருகின்றார் என்பதை ஆணித்தரமாக சொல்லிவைக்க விரும்புகின்றேன். அதேவேளை, நிந்தவூர் பிரதேச செயலகத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்தில் கல்முனை பிரச்சினை ஆராயப்பட்டு, முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதாக ஒரு வதந்தி கிளப்பி விடப்பட்டிருக்கிறது. இது முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பது போன்ற அப்பட்டமான பொய்யாகும். உண்மையில் அங்கு நடந்தது என்ன?

எமது கல்முனை மாநகர சபை எல்லையினுள் அமைந்துள்ள பெரிய நீலாவணை–02 தமிழ், முஸ்லிம் கிராம சேவகர் பிரிவுடன் தொடர்புடைய சர்ச்சைக்கு தீர்வு கோரி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஒரு கடிதத்தை அனுப்பி, தெளிவுபடுத்தியிருந்தேன். எனது வேண்டுகோளை நேரடியாக விசாரித்து, பரிசீலிப்பதற்காகவே நிந்தவூர் பிரதேச செயலகத்தில் அவர் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார். அங்கு குறித்த கிராம சேவகர் விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது என்னால் முன்வைக்கப்பட்ட நியாயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு,

ஒரு கிராம சேவகர் பிரிவை உருவாக்குவதற்கான சாதக நிலைமை எட்டப்பட்டிருக்கிறது. அத்துடன் இஸ்லாமாபாத்தில் உள்ள தனியார் காணியொன்று பற்றிய முறைப்பாடு தொடர்பிலும் அரசாங்க அதிபர் களவிஜயம் மேற்கொண்டு, நிலைமையை ஆராய்ந்தார்.

இக்கூட்டத்தில் சர்ச்சைக்குரிய கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பிலோ அதன் எல்லைகள் பற்றியோ எதுவும் பேசப்படவில்லை. மாவட்ட அரசாங்க அதிபரின் நிகழ்ச்சி நிரலில் இவ்விடயம் இருக்கவில்லை. ஹரீஸ் எம்.பி. பங்குபற்றாத எந்தவொரு கூட்டத்திலும் இவ்விவகாரம் பற்றி உத்தியோகபூர்வமாக பேசப்படவோ தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவோ மாட்டாது என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றேன்– என்று கல்முனை முதல்வர் மேலும் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி பிரதேசசபையால் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு

த.சுபேசன்

பெண்கள் அபிவிருத்தி நிதியம் ஊடாக சாவகச்சேரிப் பிரதேசசபையின் பெண் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மூலமாக வெள்ளிக்கிழமை இரண்டாம் கட்டமாக 10பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேசசபையில் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சபையின் உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட 10பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக 10நல்லின ஆடுகளை வழங்கி வைத்திருந்தனர்.

பெண்கள் அபிவிருத்தி நிதியத்தின் நிதி ஒதுக்கீடு மூலமாக கடந்த வாரமும் 10பயனாளிகளுக்கு சாவகச்சேரி பிரதேசசபை ஊடாக வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நம்பர் 04இல் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மிக நீண்ட காலத்தின் பின் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே.கருணாகரனின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 04.11.2022 திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 சூழல் மற்றும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரத்தன்மை காரணமாக நீண்ட காலமாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெறாமலிருந்து வந்த நிலையில் கடந்த 2022 மாசி மாதத்திற்கு பின்னர் எதிர்வரும் (04) திகதி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், உணவுப் பாதுகாப்பு குறித்த கிராமப் பொருளாதார மறுமலர்ச்சி தேசிய வேலைத் திட்டம், மட்டக்களப்பு மாவட்டத்தின் உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மற்றும் புதிய திட்ட முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளித்தல் (2022) போன்ற மேலும் பல விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு "நவபோஷா" விநியோகம்

(காரைதீவு சகா)

ஐக்கிய ராஜ்ஜியத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு நலிவுற்றோர் அபிவிருத்தி சங்கம் (**BUDS. UK**) மற்றும் மட்டக்களப்பு மருத்துவமனைகளின் நண்பர்கள் சங்கம் (**FOBH. UK**) என்பவற்றின் நிதிப்பங்களிப்பில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு 'நவபோச' சத்துமா வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது. இவ் வைபவம் காரைதீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் நடராஜா அருந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கல்முனை ஆதாரவைத்திய சாலையின் பிரதிவைத்திய அத்தியட்சகர் டாக்டர் சாமித்தம்பி இராஜேந்திரன், காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர்,காரைதீவின் சமூக சேவையாளர் வி.ரி.சகாதேவராஜா, வைத்திய அதிகாரிகளான டாக்டர் த.உமாசங்கர் டாக்டர் க.ஹரிஷானந்த் , கல்முனை ஆதாரவைத்திய சாலை நிருவாக உத்தியோகத்தர் எஸ்.தேவஅருள் உத்தியோகத்தர் வி.சுந்தர் ஆகியோர் கலந்து நவபோஷா பொதிகளை வழங்கி வைத்தனர்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரனிடம், காரைதீவின் சமூக சேவையாளர் வி.ரி.சகாதேவராஜா விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இருநூறு "நவபோஸா " பொதிகள் காரைதீவுக்கு வழங்கப்பட்டது. அதன் பலனாக காரைதீவு பிரதேசத்தில் ஒரு தொகுதி தாய்மார்களுக்கான சத்துமா பொதிகள் முதல் கட்டமாக வழங்கிவைக்கப்பட்டது. நேற்று முன்தினம் கல்முனை ஆதாரவைத்திய சாலையில் 800 பொதிகள் கல்முனைப் பிராந்திய கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை தெரிந்ததே.

திருக்கோவிலில் திருக்கல்யாணம்

(வி.ரி சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி விரத இறுதியில் நடைபெறும் திருக்கல்யாணம் நிகழ்வு கடந்து இரண்டு வருடங்களுக்கு பிற்பாடு சிறப்பாக நடைபெற்றது. திருக்கல்யாண சடங்கினை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் மற்றும் ஆலயகுரு சிவசிறி அங்குசநாதக்குருக்கள் ஆகியோர் சிறப்பாக நடாத்தி வைத்தனர். ஆலயத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் மற்றும் ஆலயகுரு சிவசிறி அங்குசநாதக்குருக்கள் முன்னிலையில் இடம் பெற்று வந்த கந்தசஷ்டி விரதம் நேற்று முன்தினம் இரவு திருக்கல்யாண நிகழ்வுடன் நிறைவு பெற்றது. வழமைக்கு மாறாக ஏராளமான பக்தர்கள் விரதத்தினை அனுஷ்டித்து வந்ததுடன் சூரன் போர் மற்றும் திருக்கல்யாண நிகழ்வுகளிலும் பங்கேற்றனர். ஆலய பரிபாலன சபையினரும் கலந்து கொண்டனர்.

குழல்வாய் மொழி இரு குறுங்காவியங்கள் நூல் திருகோணமலையில் அறிமுக விழா

(அ . அச்சுதன்)

எழுத்தாளர் அ.ச.பாய்வாவின் குழல்வாய் மொழி இரு குறுங்காவியங்களின் நூல் அறிமுக விழா திருகோணமலை உவர்மலை சமூகசற்கைகள் நிலையத்தில் 05-11-2022 சனிக்கிழமை மாலை 3.45 மணிக்கு நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம் பெறும். நிகழ்வின் முதன்மை அதிதியாக திருகோணமலை வலயக்கல்விப்பணிப்பாளர் சி.சிறிதரன் அவர்களும் சிறப்பு அதிதிகளாக ஒய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் ஓ.குலேந்திரனும் வைத்தியர் ஆய்வாளர் அ . ஸதீஸ்குமார் அவர்களும் கலந்து சிறப்பிப்பார்கள். நிகழ்வில் வரவேற்புரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் அ . அச்சுதன் வழங்க நூல் விமர்சன உரைகளை கவிஞர்களான க. யோகானந்தன், தி. லலிதகோபன் ஆகியோர்வழங்குவார்கள். ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் வழங்குவார்.

நூலகங்களை பெயரளவில் திறந்து வைப்பதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை - தவிசாளர் முபாறக் தெரிவிப்பு

அபு அலா

தேசிய வாசிப்பு வாரத்தையொட்டி குச்சவெளி வடலிக்குளம் பிரதேசத்தில் புதிய நூலகத்தை குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறத்து வைத்து பொதுமக்களிடம் கையளித்து வைத்தார். குச்சவெளி பிரதேச சபை செயலாளர் மா.மாலினி அசோக்குமார் தலைமையில் (31) இடம்பெற்ற இந்த திறப்பு விழாவில், உதவித் தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அங்கு தவிசாளர் ஏ.முபாறக் உரையாற்றுகையில்,

நூலகங்களை பெயரளவில் திறந்து வைப்பதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை. அதனை முழுமையாக நாம் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். எம்மிடத்தில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அது ஒரு மனிதனை பரிபூரணமாக்குகிறது. மின்னணு ஊடகத்தின் ஆதிக்கம் இன்று அதிகரித்துள்ளதால் அச்சு ஊடகத்தின் பயன்பாட்டைக் குறைவடையச் செய்துள்ளது. அதனால் எம்மிடையே புதிய நூல்களை வாங்கும் பழக்கமும், நூலகங்களில் நூல்களை எடுத்து வாசிக்கும் பழக்கமும் குறைந்து வருகின்றது.

வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதற்கு பெற்றோர்களும் ஒரு காரணமாக உள்ளனர். ஏனென்றால், வீட்டில் புத்தகங்களை படிக்கும் பழக்கம் அவர்களிடத்தில் இல்லாததால், பிள்ளைகளும் அப்படியே மாறிவிடுகின்றனர். இதிலிருந்து நாம் மீண்டுகொள்வதன் மூலம் வாசிப்புப் பழக்கத்தை எம்மிடத்தில் ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்றார். இந்நிகழ்வின்போது, நூலக வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகளும் தவிசாளர் உள்ளிட்ட அதிதிகளினால் நட்டிவைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

வீடு பயனாளியிடம் கையளிப்பு

செங்கலடி நிருபர்

லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபையின் நிதியுதவியினால் மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி – இலுக்குப்பொத்தானை கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றிற்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியில் வந்தாறுமூலை– பலாச்சோலை கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடு பயனாளியிடம் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (31) நடைபெற்றது

சித்தாண்டி – இலுக்குப்பொத்தானை கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் வசிப்பதாக லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபைனரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் கிராமிய சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளியான யோகராசா வள்ளி குடும்பத்திற்கு வீடு அமைப்பதற்கான நிதியினை லண்டனில் வசித்து அமரத்துவமடைந்த பொன்னையா மர்க்கண்டு திருமதி லீலாவதி மார்க்கண்டு அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினர் வழங்கியிருந்தனர்

லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச சபை தவிசாளர் சி.சர்வானந்தன், பிரதேச சபை உறுப்பினர் வேல் பரமதேவா மற்றும் லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளரான லோகநாதன் அனோஜன் ஆகியோர் இணைந்து வீட்டினை பயனாளியிடம் கையளித்தனர்.

கணவனால் கைவிடப்பட்ட நிலையில் வாழ்வாதாரத்தை இழந்து பாதுகாப்பற்ற குடிசை வீட்டில் வாழ்ந்துவந்த குறித்த குடும்பம் தொடர்பாக லண்டனை ஈழபதீஸ்வரர் ஆலய நிருபாக சபைக்கு முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த வீடு கட்டுவதற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது. லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிருவாக சபையின் நிதியுதவியினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்து வீடுகள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளதுடன் பல ஆலயங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. குறித்த நிகழ்வில் வாழ்வாதாரம் பாதிக்கபட்டமூன்று குடும்பங்களுக்கு உணவுத் தேவைக்காக நிதியுதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது